Crl.Misc.40.

**EXAMINATION OF THE ACCUSED**

(Section 274 of BNSS)

– – – – – – –

IN THE COURT OF

Calendar .. ..

Miscellaneous .. .. STC 804 of 2024

Preliminary Register .. ..

STATEMENT OF ACCUSED

Name : ஹரிகிருஷ்ணா

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Date : 06-10-2025

<u>**Questions**</u> : இவ்வழக்கின் புகார்தாரர் பரமசிவம் எதிரியாகிய நீர் வாதிக்கு லாரி சர்வீஸ் தொழில் மூலம் தெரியும் என்ற பழக்கத்தின் அடிப்படையில், 06.07.2024 அன்று வாதியிடம் எதிரியாகிய நீர் உங்களின் லாரி கொல்கத்தா மாநிலம் சிலிகரியில் மாட்டியதால் Sales Tax Department க்கு அபராதம் கட்ட வேண்டும் என்ற தேவைக்காக ரூ.6,35,000/– ரொக்கமாக பெற்றுக்கொண்டு, வாதி உங்களிம் நிபந்தனையாக Security ஆவணம் கேட்டதற்கு, உங்களுடைய சாத்தூர் கிளை Axis Bank நிரப்பப்படாத வெற்றுகாசோலையை (காசோலை எண்.085492) வாதியிடம் கொடுத்து மேற்படி கடன் தொகையை 1 மாதங்களில் திருப்பி தந்துவிடுவதாக நீங்கள் கூறியதாகவும், வாதி எதிரியாகிய உங்களிடம் மேற்படி தொகையை கேட்ட போது, தொகையை திரும்ப செலுத்தும் முகமாக ரூ.6,35,000/–த்திற்கான ஏற்கனவே Security ஆக கொடுத்த தங்களுடைய வங்கி கணக்குள்ள சாத்தூர் கிளை Axis Bank காசோலையை (காசோலை எண்.085492), 24.09.2024 ம் தேதியிட்டு கையெழுத்திட்டு நிறைவேற்றி கொடுத்து, வசூலுக்கு தாக்கல் செய்யுமாறு கூறியதாவும், தங்களுடைய காசோலையை வாதி சாத்தூர் பெடரல் வங்கியில் உள்ள வங்கி கணக்கில் வசூலுக்காக 25.09.2024 ம் செலுத்திய போது, அது 26.09.2024 ம்

தேதி "Funds Insufficient" என ரிட்டன் மெமோ கொடுக்கப்பட்டதாகவும், 28.09.2024 ம் தேதி எதிரிக்கு மேற்படி காசோலை தொகையை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதை நீங்கள் 01.10.2024 ம் தேதி அறிவிப்பை பெற்றுக்கொண்டு, எனவே, 21.10.2024 ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும் இது நாள் வரை பணம் தரவில்லை என்பதால் புகார்தாரர் உம்மீது மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 ன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளாரே, அது பற்றி நீர் கூறும் முகாந்திரம் என்ன? நீர் என்ன குற்றவாளியா? இல்லையா? நீர் என்ன சொல்கிறீர்?

**<u>பதில் :</u>** நான் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ரூபாய் 50,000/—த்தை மூன்று முறையாக, மொத்தம் ரூபாய் 1,50,000/—த்தை கடனாக பரமசிவத்திடமிருந்து வாங்கினேன். அதற்காக என்னுடைய ஒரு காசோலையை கையொப்பமிட்டுக் கொடுத்தேன். அந்தத் தொகையை திருப்பி செலுத்துவதற்காக நான் வாரம் ரூபாய் 15,000 வீதம் ரூபாய் 4,70,000 கொடுத்துள்ளேன். இந்தத் தொகையை நான் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை கொடுத்தேன். ஆகையால், நான் அவருக்கு தற்போது பணம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை.